DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C No. 21 / 2018 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 2 |
| Name | : சீனி. |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.10.2023.

10 வது எதிரி ஆஜரில்லை. மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மற்ற எதிரிகளில் 1, 2, 3, 5, 6, 7, 8, 11 வரையிலான எதிரிகள் ஆஜர். எதிரிகள் 4 மற்றும் 9 இறந்துவிட்டதால் குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது.

<u>முதல் விசாரணை:</u>

நான் சீல்நாயக்கன் பட்டியில் குடியிருக்கிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்னர் நாங்கள் காட்டில்

குடியிருந்தபோது, காலை 6 மணி சுமாருக்கு நான் தோட்டப் பக்கம் உள்ள ஓடையில் சென்றுகொண்டிருந்தேன். நான் காலைக் கடன் கழித்துக் கொண்டிருக்கும்போது, ஆஜர் எதிரிகள் என்னைத் தாக்கி, என் தாக்கி கழுத்தில் லிங்கப்பன், அம்சு, வெள்ளைச்சாமி ஆகியோர்கள் அரிவாளைக் கொண்டு அறுத்தார்கள். (சாட்சி கழுத்தில் உள்ள காயத் தழும்பை நீதிமன்றத்தில் காண்பிக்கிறார்). தவசம்மாள் வாயில் துணியை வைத்து அமுக்கினார். குருவைய்யா காலை, கையையும் கட்டிவிட்டார். மற்றவர்கள் உடன் இருந்துவிட்டு ஆட்களைப் பார்த்ததும் ஓடிவிட்டார்கள். என்னை ஆம்புலன்சில் வைத்து மருத்துவமனையில் சேர்த்தார்கள். காயத்தின் தன்மை அதிகமாக இருந்ததால் மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். நான் மருத்துவமனையில் இருந்ததால், என் மகன் புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார். என்னிடம் காட்டப்படும் பெரிய அரிவாளைக் கொண்டு லிங்கப்பன் கழுத்தை அறுத்தார். அது சா.பொ.1. என்னிடம் காட்டப்படும் சிறிய அரிவாளைக் கொண்டு யார் தாக்கினார்கள் என்றால் ஞாபகமில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை - இல்லை.

Sd / Thiru. P.S. ரஸ்கின் ராஜ், 12.10.23.

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி,

உசிலம்பட்டி.